## பிப்ரவரி வேத வினா போட்டி விடைகள்

**மத்தேயு 11-28**

1. யோவான் (11:9)
2. கப்பர்நகூம் (11:23)
3. இரக்கம் (12:7)
4. ஆவியானவருக்கு (12:31)
5. யோனா (12:40)
6. 100, 60, 30 (13:23)
7. புளித்த மாவு மூன்று (13:33)
8. மனுஷகுமாரன் (13:37)
9. நல்ல முத்துக்களை (13:45)
10. யாக்கோபு, யோசே, சீமோன், யூதா (13:55)
11. ஏரோது (14:1)
12. ஏரோதியாள் (14:3)
13. நாலாம் ஜாமம் (14:25)
14. இருதயம் (14:18)
15. பேதுரு, யாக்கோபு, யோவான் (17:1-2)
16. கெட்டுப்போனதை (18:11)
17. தன் குமாரனுக்கு (22:2)
18. மோசே (23:2)
19. அன்பு (24:12)
20. ஒலிவ மலை (26:30)
21. பேதுரு (26:33)
22. எரேமியா (27:9-10)
23. எரேமியா (28:16)
24. தூதன் (28:3)
25. இயேசு (28:18)

---

**ஜெபியுங்கள்...**

- ❖ பைபிள் உலகம் குடும்பத்திற்காக...
- ❖ எல்லா திருச்சபை ஊழியங்களுக்காக, ஆயர்களுக்காக...
- ❖ இந்த மாதம் நாம் சந்திக்கப் போகும் கிராம திருச்சபைக்காக...
- ❖ கடந்த மாதம் நாம் உணவளிப்பதற்கு உதவி செய்த ஒவ்வொரு சகோதர சகோதரிகளுக்காக, அவர்களுடைய குடும்பங்களுக்காக
- ❖ ஒவ்வொரு வாரமும் நடைபெறும் Online Prayer தொடர்ந்து நடைபெற...
- ❖ நம் ஜெபத்திற்கு பதில் தந்து ரேவதி சகோதரிக்கும், குழந்தைக்கும் சுகம் தந்த தேவனுக்கே மகிமை. ஆமென்.

---

திரு. R. **சுதர்சன்,** செயலர், திரு. T. **சுதாகர்,** பொருளர்

# பைபிள் உலகம்

மாதாந்திர செய்தி கடிதம்
**ஏப்ரல் 2024**

**நீங்கள் நன்மை செய்வதிலே சோர்ந்துபோகாமல் இருங்கள்.**

2 தெசலோனிக்கேயர் 3:13



தொகுப்பாசிரியர்கள்
திரு. P. **இம்மானுவேல்,** திரு. J. **பெஞ்சமின்**

Post Box No.902, Sathuvachari, Vellore - 632009
9894417502

*‘நீங்கள் நன்மை செய்வதிலே சோர்ந்து போகாமலிருங்கள்’ - 2தெச.3:13*

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிக்கு,

நமது ஆண்டவர் இயேசுவின் திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்கள்!

நீங்கள் சுகமாயிருப்பீர்கள் என்று தேவனுக்குள் விசுவாசிக்கிறேன். உங்களையும், உங்கள் குடும்பத்தையும் ஆண்டவர் ஆசிர்வதிப்பாராக!

கடந்த மாதம் முழுதும் நம்மை காப்பாற்றிய நம் தேவைகளை சந்தித்த தேவனுக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளை ஏறெடுக்கிறேன்.

மார்ச் மாதம் 17ஆம் தேதி நமது பைபிள் உலகம் குடும்பத்தின் சார்பில் திருவலம் சர்க்கரை ஆலை அருகில் உள்ள சாலையோர மக்களுக்கு உணவு வழங்க தேவன் கிருபை செய்தார். உதவிய, அதற்காக உழைத்த, ஜெபித்த நல்உள்ளங்களுக்கு நன்றி. தொடர்ந்து உதவி செய்யவும், ஜெபிக்கவும் ஆண்டவர் அருள்புரிவாராக!

நமது வாராந்திர Online Prayer வியாழக்கிழமைகளில் நடத்தலாம் என்று ஆலோசித்து, நடத்தி வருகிறோம். உங்கள் பங்களிப்பை எதிர்பார்க்கிறேன். இந்த ஊழியத்திற்காக ஜெபிக்கும் உங்களை தினமும் தினைத்து தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

சிறுபிள்ளைகளுக்கான ஓவிய போட்டியில் அநேகம்பேர் கலந்துகொள்வது மகிழ்ச்சி அளிக்கிறது. வேதவினா போட்டியில் பங்கேற்கும் உங்களுக்கு நன்றி.

*‘வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பாராக.’* - சங்.134:3

தொடர்ந்து நமது பைபிள் உலகம் குடும்பத்திற்காக ஜெபியுங்கள்! தாங்குங்கள்! நன்றி!

அன்புடன் சகோதரன்

**அருணன் பால்**

## ஏப்ரல் மாத வேத வினா போட்டி

***(வேத வசன ஆதாரத்துடன் விடையளிக்கவும்)***

**பரிசுத்த மாற்கு**

1. யோவான் மனந்திரும்புதலுக்கேற்ற எதைக் குறித்து பிரசங்கம் பண்ணினார்?
2. பரிசுத்த ஆவியானவர் எப்படி இயேசுவின் மேல் இறங்குகிறதை கண்டார்?
3. செபுதேயுவின் மகன்கள் இயேசுவை சந்திக்கும்போது என்ன செய்து கோண்டிருந்தனர்?
4. திமிர்வாதக்காரனை எத்தனை பேர் சுமந்து வந்தனர்?
5. இயேசு, பாவிகளை எதற்கு அழைக்க வந்தார்?
6. மனுஷகுமாரன் எதற்கும் ஆண்டவராயிருக்கிறார்?
7. இயேசு, பேதுரு என்று யாருக்கு பெயரிட்டார்?
8. எதற்கு விரோதமான தூஷணம் மன்னிக்கப்படுவதில்லை?
9. பூமியிலுள்ள சகல விதைகளிலும் சிறியது எது?
10. போஜனம் பண்ழுகிறதற்கும் சமயமில்லாமல் இருந்தது - யாருக்கு?
11. இயேசுவை பார்த்து நீர் கிறிஸ்து என்று சொன்ன சீஷன் யார்?
12. பேதுரு இயேசுவை நோக்கி, எத்தனை கூடாரங்கள் போடுவோம் என்றார்?
13. எந்த மனுஷனும் எதினால் உப்பிடப்படுவான்?
14. ஒட்டகமானது எதில் நுழைவது எளிது?
15. இயேசுவின் 10 சீடர்கள் எந்த இரண்டு பேர் மீது எரிச்சலானார்கள்?
16. பர்திமேயு என்னும் குருடன் யாருடைய மகன்?
17. இயேசு எந்த மரத்தில் கனியை தேடினார்?
18. உயிர்தெழுதலை நம்பாதவர்கள் யார்?
19. ஏழையான விதவை எத்தனை காசை காணிக்கையாக போட்டார்?
20. பாழக்குகிற அருவருப்பை குறித்து சொன்ன தீர்க்கதரிசியார்?
21. விழித்திருந்து என்ன செய்ய வேண்டும்?
22. உயிர்த்தெழுந்த பின்பு எங்கே முன்னதாக போவேன் என்று இயேசு சொன்னார்?
23. பேதுரு யாரிடம் இயேசுவை மறுதலித்தான்?
24. சிரேனே ஊரான் சீமோன் யாருடைய தகப்பன்?
25. இயேசு உயிர்த்தெழுந்தபின் யாருக்கு முதன்முதலாக தரிசனமானார்?